பக்கங்கள்: நான்கு

STAFF COPY
NOT FOR SALE

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஆவணி மீ 17 உ ஞாயிற்றுக்கிழமை (02-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 12 கதிர்: 183

## இராணுவ முகாமை காப்பாற்றும் முயற்சியாக

# முல்லைத்தீவில் 2 இடங்களில்

# துருப்புக்கள் தரை இறக்கம்!

## நகர விடாது புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 2

முல்லைத்திவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழாமல் அதனைக் காப்பாற்றும் முயற்சியாக முகாமுக்கு நெருக்கமாக இரு இடங்களில் நேற்றுக் காலை துருப்புக்கள் தரையிறக்கப் பட்டன.

கடல்வழியாகவும், ஹெலிக்கொப்டர்கள் மூலமும் தரையிறககப் பட்ட இந்தத் துருப்புக்களை, அவை தரையிறக்கப்பட்ட இடங்களுக்கு அப்பால் நகரவிடாமல் விடுதலைப் புலிகள் கடுமையாகத் தாக்கி வருவதாக அங்கிருந்து பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கள்ளப்பாடு கடற்கரையோரப் பகுதிகளில் கடற் படைப் படகுகள் மூலமும்- நந்திக்கடல் ஓரம் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் ஹெலிக்கொப்டர்கள் மூலமும் துருப்புகள் தரையிறக்கப்பட்டன.

துருப்புகள் தரையிறக்கப் பட்ட இடங்களை உடனடியாக விடுதலைப்புலிகள் சுற்றி [4 ஆம் பக்கம் பார்க்க]

## ஊர்காவற்றுறை - மண்டைதீவில் 300க்கு மேற்பட்ட மக்கள் கொலை

### பிரசைகள் குழு ஜனாதிபதிக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 2

ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பரேஷன் யாழ் கோட்டை'' இராணுவ நடவடிக்கையால் இதுவரை கிடைத்த தகவல்களின் பிரகாரம் 300க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இந்தக் கொலைகளையும், ஏனைய அழிவுகளையும் தவிர்ப்பதற்கு இனியும் பிந்தாமல் நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரசைகள் குழு ஜனாதிபதிக்கு ஆகஸ்ட் 30ஆம் திகதியிட்டு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை அழிக்கும் நடவடிக்கையும், அனர்த்தங்களும் கடந்த எட்டு நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வருவதை தங்கள் கவனத்துக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று 10 லொறிகளில் உணவுப்பொருள்கள்வந்தன

கொழும்பில் இருந்து நேற்றும் உணவுப் பொருள்களுடன் பத்துக்கும் மேற்பட்ட லொறிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

உணவுப் பொருள்கள் மட்டுமே எடுத்து வர படையினர் அனுமதித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

லொறிகளில் கொண்டு வந்த பொருள்களை கடை உரிமையாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கினர். [ஓ-3]

## வவுனியா நகருள் பிரவேசிக்க தமிழர்களுக்கு விசேட 'பாஸ்'

### அடையாள அட்டையை கொடுத்து பெறலாம்

வவுனியா, செப். 2

வவுனியா நகருக்குள் தேவை கருதி பிரவேசிக்க விரும்பும் தமிழர்கள் தமது தேசிய அடையாள அட்டைகளைப் படையினரிடம் கொடுத்து விசேட 'பாஸ்' ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நகரப் பகுதியிலுள்ள கடைகள், வீடுகளைப் பார்க்கச் செல்வோர் இந்த 'பாஸை' ப் பெற்றே செல்லமுடியும்.

நகரை விட்டு வெளியேறும் போது இந்த 'பாஸை'க் கொடுத்துவிட்டு அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை, கடை உரிமையாளர்கள், அரசஊழியர் போன்றோருக்கு நிரந்தர 'பாஸ்' வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் படையினரின் 'சென்றி' யில் கையொப்பமிட்டுவிட்டு, நகருக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். (ஓ 3-16)

## பூநகரியில் ஹெலி சூடு

யாழ்ப்பாணம், செப். 2

பூநகரி, முழங்காவில் பகுதிகளில் நேற்று முன்தினம் [வெள்ளி] ஹெலி ஒன்று மக்கள் நடமாட்டம் காணப்பட்ட இடங்கள் மீது சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது.

இச் சம்பவத்தில் சிறுமி ஒருத்தி படுகாயமடைந்தார். முழங்காவிலைச் சேர்ந்த சேதுராமேந்திரன் [வயது-10] என்ற சிறுமியே காயமடைந்தவர் ஆவர்.

இவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஓ-15]

## மிதிவெடியில் சிக்குண்டவர் காலை இழந்தார்

யாழ்ப்பாணம், செப். 2

வவுனியா, சூடுகண்டபுலவு பகுதியில் இராணுவம்வைத்த மிதிவெடியில் சிக்கி, பெண் ஒருவர் காலை இழந்தார்.

நேற்று முன்தினம் (வெள்ளி) நடந்த இந்தச் சம்பவத்தில் [illegible] (வயது 44) என்பவரே காலை இழந்தார். (ஓ)

## கருணாநிதி - தொண்டா சென்னையில் சந்திப்பு

### ஈழத்தமிழர் விவகாரம் பற்றி பேச்சு

சென்னை. செப் 2

அமைச்சர் திரு எஸ் தொண்டமான் நேற்று தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார்.

சென்னையிலுள்ள முதலமைச்சரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் நடந்துவரும் யுத்தம் ஸ்ரீலங்கா படையினரின் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்கள், அதனால் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்படுவது, சமரச முயற்சி என்பன குறித்து இருவரும் கருத்தும் தகவலும் பரிமாறிக் கொண்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

## மண்டைதீவுப் பகுதியில் 4 சிப்பாய்கள் மரணம்

கொழும்பு, செப். 2

மண்டைதீவுப் பகுதியில் மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றுவதில் ஈடுபட்டிருந்த இராணுவ வெடிமருந்து அகற்றும் பிரிவைச் சேர்ந்த நான்கு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

இன்னும் நான்கு சிப்பாய்கள் அப்போது காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. [ஓ]

## மணியம்தோட்டத்தில் ஷெல்; மூன்று பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 2

மண்டைதீவில் இருந்து நேற்று முன்தினம் (வெள்ளி) இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் மணியம் தோட்டத்தில் விழுந்து வெடித்தது.

இந்த ஷெல் வீச்சுக்கு இலக்காகி மூவர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் ஒருவர் போராளி. மற்றைய இருவரும் பொதுமக்கள்.

வீரமரணமடைந்த போராளி ஆனந்தன் என்பவர் ஆவார். மணியம் தோட்டம் 4 ஆம், 5 ஆம் குறுக்குத்தெருக்களைச் சேர்ந்த ராஜசேகரம், கோ. பாலகிருஷ்ணன் (வயது 25) ஆகிய இருவருமே இறந்த பொதுமக்கள் ஆவர். [ஓ]

## மண்டைதீவு ஷெல்லால் நகரில் மாதா கோயில் சேதம்

மண்டைதீவு இராணுவத்தினர் நேற்று முன்தினம் (வெள்ளி) மாலை 5. 15 மணியளவில் மேற்கொண்ட ஷெல் வீச்சில் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடைக்கல மாதா தேவலயம் சேதம் அடைந்தது.

தேவாலயத்தினுள் ஷெல் விழுந்ததால் அங்குள்ள தளபாடங்கள் போன்றவை பெரும் சேதமுற்றன. (ஓ)

## வாழைச்சேனை, கல்குடாவில் தேடுதல்: 25 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், செப். 2

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனை, கல்குடா பகுதிகள் கடந்த புதனன்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் பின்னர் 25 பேர் வரை கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

பின்னர் அவர்களுக்குஎன்ன நடந்தது என்று குறித்து தகவல் ஏதும் தெரியவில்லை. (உ-5)

## குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், செப். 2

நேற்று மாலை 5. 15 மணியளவில் நகருக்கு வந்த இரு பொம்மர்கள் கோட்டைப் பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**மலிவு விற்பனை**

**V. K.M. Farm**

எம்மிடம் புறொயிலர்ஸ் இறைச்சிக் கோழி என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். சில்லறை விலை (50/-) தொடர்பு 12, கனகசபை லேன், (யாழ்/ இந்துக் கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம்.

[13932]


# வடமராட்சி கிழக்குப் பகுதியில் உக்கிர வான் தாக்கு

## ஆழியவளையில் ஒருவர் பலி

தாளையடி, செப். 2

வடமராட்சி கிழக்கில் வான் தாக்குதல் கடந்த ஒரு வார காலமாக மிக உக்கிரமடைந்துள்ளது.

இதனால் இப்பகுதியில் விமானச் சத்தம் கேட்டதும் பொது மக்கள் மிகவும் பீதியடைந்த நிலையில் காணப்படுகின்றார்கள்.

கடந்த வியாழக்கிழமை அரிசி எடுத்து வந்த அரிசி வியாபாரிகள் மீது. ஆழியவளைக்கு அண்மையில் உள்ள தரவை வெளியில் ஹெலி தாக்கியதினால் ஒருவர் மரணமடைந்தார் மற்றும் மூவர் பலத்த காயமடைந்தார்கள்.

அதே வேளை ஹெலியிலிருந்து இரவு நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டதினால், கட்டைக்காடு கப்பலேந்தி மாதா கோயிலின் கூரை சேதமடைந்துள்ளது:

இச்சம்பவம் நடைபெற்ற போது, பொதுமக்களும் திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களும், கோயிலுக்குள் தங்கியிருந்த போதிலும் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்கள்.

கடந்த திங்கட்கிழமை நாகர் கோவிலில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீதும், ஹெலியும், பொம்மரும் தாக்குதலை மேற்கொண்டன.

யாழ். குடாநாட்டுக்குள் உணவுப் பொருட்களை தற்போது எடுத்து வரப்படும் கண்டாவளை கொம்படிப் பாதையைத் தடைசெய்து விடுவதற்காக, அப்பகுதியில் தினமும் பொம்மர், ஹெலி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தாக்குதலால் அப்பகுதியில் வான்கள், டிரக்டர்கள், லொறிகள் ஆகியன எரிந்த நிலையிலும், சேதமடைந்த நிலையிலும் காணப்படுகின்றன. (ஒ-144)

## அரச ஊழியர் திரிசங்கு நிலையில்

யாழ்ப்பாணம், செப். 2

அரச ஊழியர்கள் தமது சம்பளக் காசோலைகளைப் பெற்றும் அவற்றை பணமாக மாற்றமுடியாது திரிசங்கு நிலையில் உள்ளனர்.

வங்கிகள் இயங்காததாலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் காசோலைகளை மாற்றமறுப்பதாலும் காசோலைகளை வைத்திருப்போர் ஒன்றும் செய்யமுடியாது கஷ்டப்படுகின்றனர்.

(உ-3)

## சைக்கிள் திருடன் பிடிபட்டான்

திருநெல்வேலி, செப். 2

சுன்னாகம் சந்தைக்குச் சமீபமாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருடிச் சென்ற ஒருவரைப் பொதுமக்கள் விரட்டிப் பிடித்தனர்.

சைக்கிள் உரிமையாளர் பொதுமக்களின் உதவியுடன் திருடனைக் கோண்டாவில் வரை கலைத்துவந்து பிடித்தனர். (ஒ-143)

# மரண அறிவித்தல்கள்

## டாக்டர் எஸ். கந்தையா

செட்டித் தெரு இலக்கம் 9 இல் வசித்தவராகிய Dr. சந்தையா 01 - 09 - 90 இல் காலமானார். அன்னார் திருமதி சண்முகநாயகியின் அன்புக் கணவரும், Dr இராசநாயகத்தின் (ஓமான்) அன்புத் தந்தையும். Dr. சிவசக்தியின் அன்பு மாமனாரும், செல்வன் செந்தூரனின் அன்புப் பேரனும், தருமலிங்கம் (கனடா) அவர்களின் அன்புத் தமையனாரும், காலஞ்சென்றவர்களாகிய நமசிவாயகம், சுந்தரம்பிள்ளை, சின்னத்துரை ஆகியோரின் தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01 - 09 - 1990 சனிக்கிழமை நடைபெற்று துண்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**க. சண்முகநாயகி [மனைவி]**

இல. 9, செட்டித் தெரு,
நல்லூர். [14124]

## வல்லிபுரநாதன் சண்முகநாதன்

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த வல்லிபுரநாதன் - சண்முகநாதன் 25-08-90 அன்று அகால மரணமானார்.

இவர் ஏ. அ. வல்லிபுரநாதன் (சமாதான நீதவானும், மரண விசாரணை அதிகாரியும்), திருமதி மனோன்மணி வல்லிபுரநாதனின் சிரேஷ்ட புதல்வனும், தயாபரன், அருட்செல்வநாதன் (ஜேர்மனி), கங்காதேவி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், சுதுமலை அ. சண்முகரத்தினம் தம்பதிகளின் பெறாமகனும், யமுனா (ஜேர்மனி), ஆனந்தலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், அகிலன், அஜந்தா (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தந்தையும், ஜெயசாந்தி, அர்ச்சுனா (லண்டன்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

**ஏ. அ. வல்லிபுரநாதன்**

அல்லைப்பிட்டி [14125]

## திருமதி சரஸ்வதி இரத்தினசபாபதி

யாழ். கொட்டடி 5, சீனிவாசகம் வீதியைச்சேர்ந்த திருமதி சரஸ்வதி இரத்தினசபாபதி 26-08-90இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. சி. இரத்தினசபாபதி (அரசாங்க ஆடிற்றர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், தேன்மொழி (ஆஸ்திரேலியா), மலர்விழி (மா கா ஸ்தாபனம், கொழும்பு), சிவகுமார் (பொறியியலாளர், றெட்பானா யாழ்ப்பாணம்), ஆனந்தகுமார் (மாநகர சபை, யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும். திருமதி மனோன்மணி சங்கரப்பிள்ளை (கனடா), திரு. ரி. ஜெயரெட்ணம் (கனடா), திரு. சி. கே. இராஜரெட்ணம் (மாம்பழம் சந்தி), திரு. சி. கே. சண்முகராசா (கொழும்பு), டாக்டர் சி கே. துரைரெத்தினம் (லண்டன்). திரு. சி. கே. தியாகராசா (நகர அபிவிருத்தி திணைக்களம். கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28 - 08 - 90 இல் கொழுமபில் கனத்தை மயானத்தில் நடைபெற்றது இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் யாபேரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:

**சி. இரத்தினசபாபதி (கணவன்)**

403/6 2ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
நல்லூர். [14126]

# இலங்கைத் தேயிலை இனி ஈராக்கிற்கு விற்பனை இல்லை

கொழும்பு, செப். 2

ஈராக்குக்குத் தேயிலலயை விற்பனை செய்வதில்லை என்று இலங்கை அரசு தீர்மானித்து உள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இத்தகவலை கடந்த வியாழக்கிழமை செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

குவைத்தை ஆக்கிரமிப்புச் செய்ததற்காக ஈராக் மீது ஐ. நா. விதித்த பொருளாதாரத் தடைக்கு ஆதரவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த முடிவால் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு ஏற்படவுள்ள இழப்பை ஈடு செய்யும் படி அரசாங்கம் ஐ. நா. சபையை கேட்டுள்ளதாகவும் அமைச்சர் சொன்னார். (இ-எ)

## ஈரானிலிருந்து 500 பஸ்கள்

கொழும்பு, செப். 2

ஈரானில் இருந்து ஐந்நூறு பஸ்களை கொள்வனவு செய்வது பற்றி வர்த்தக வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் ஈரானிய அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருகிறார். (இ-எ)

## கரை ஒதுங்கிய சடலங்கள்

பச்சிலைப்பள்ளி, செப். 2

கடந்த வார இறுதியில் கிளாலிக் கடற் கரையில் இரு ஆண்களின் சடலங்கள் கரை ஒதுங்கின.

40வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம் அடையாளம் காணப்படாததால், அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

ஏனைய சடலம் வேலணை கிழக்கைச் சேர்ந்த கந்தையா (வயது 34) என அடையாளம் காணப்பட்டு உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. (ஒ-117)

# நெல்லைக் கொட்டிவிட்டு சாக்குகளை எடுக்கின்றனர்

அராலி, செப். 2

மண்டைதீவு — அல்லைப்பிட்டிப் பகுதிகளில் 'சென்றி' களை அமைப்பதற்காக படையினர் வீடுகளில் சாக்குகளைத்தேடி வருகின்றனர்.

வீடுகளுக்குள் செல்லும் படையினர் நெல்லைக் கொட்டிவிட்டு சாக்குகளை எடுத்துச் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பீற்றூட்டுக்கு மீண்டும் கிராக்கி

பச்சிலைப்பள்ளி, செப். 2

குடாநாட்டில் உற்பத்தியாகும் பீற்றூட்டுக்கு மீண்டும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

பீற்றூட்டை விட ஏனைய உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விலைகளும் ''சூடு'' பிடிக்கத் தொடங்கியுள்ளன.

சாவகச்சேரி சந்தையில் வெங்காயம் 16 ரூபாவாகவும், பீற்றூட் 3 ரூபாவாகவும் விற்கப்பட்டன.

தென்னிலங்கைக்கு பொருள்கள் மீண்டும் கொண்டு செல்லப்படுவதே இந்த விலை ஏற்றத்திற்குக் காரணமாகும்.

(ஒ-117)


## மலிவு விற்பனை

சுத்தமாக்கப்பட்ட, தரம் வாய்ந்த இறைச்சிக் கோழி (Dressed Chicken) மிக மலிவான விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

காலை முதல் மாலை வரை எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த அளவிலேயே கையிருப்பு உண்டு.

**வாருங்கள்! வாங்குங்கள்!!**

392. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[உதயன் பணிமனைக்கு அருகில்]

[C-5178]


## கலியாண சுந்தரனார் விருது

சென்னை செப். 2

தமிழ்த் தென்றல் வி. கலியாணசுந்தரனார் விருது தமிழக அரசால் இம்முறை புலவர் கா. கோவிந்தனுக்கும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தனுக்கும் வழங்கப்பட்டது.

சென்னை கலைவாணர் அரங்கில் கடந்த ஞாயிறு மாலை நடந்த வி. க. 180 ஆவது பிறந்த தின விழாவில் விருதுகளை முதலமைச்சர் கருணாநிதி வழங்கினார். (இ-எ)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் மயில்வாகனம்

பருத்தித்துறை வி. எம். றோட்டைச் சேர்ந்த சிவபாக்கியம் 31-08 90 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் திருமதிகள் வேதநாயகி, இராசநாயகி, ஜெகநாயகி, தங்கநாயகி [ஆசிரியை], யோகநாயகி ஆகியோரினதும் திரு. பாலசுப்பிரமணியம் [ஓமான்], திரு. ஜெகநாதன் [ஓமான்] ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி தங்கரத்தினம் சோமசுந்தரத்தின் அருமைச் சகோதரியும், திரு. பாலேந்திரத்தின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-09-90 (இன்று) காலை பருத்தித்துறையில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:

**சி. சத்தியநாதன்.**

இருபாலை. [14127]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அரச களஞ்சியத்தில் உணவுக் கையிருப்பு தீர்ந்தது

## பொருள்கள் எடுத்துவர முயற்சியும் இல்லை

வவுனியா, செப். 2

வவுனியா நகரப் பகுதியில் அமைந்திருந்த அரசாங்க உணவுக் களஞ்சியத்தில் கையிருப்பு முழுமையாக முடிவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரில் இராணுவ முகாமுக்கு முன்பாக அமைந்திருந்த உணவுக் களஞ்சியத்தில் மா, அரிசி போதியளவு இருப்பு இருந்து வந்தது.

திரு. செ. பத்மநாதன் அரச அதிபராகக் கடமையாற்றியபோது இராணுவ அனுமதியுடன் ஒரு குறிப்பிட்ட அளவு மா, அரிசி போன்றவற்றை நெடுங்கேணி வவுனியா தெற்கு பிரிவு பகுதிகளில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகித்து வந்தார்.

அந் நேரத்தில் களஞ்சியத்தில் போதிய இருப்பு இருந்த போதும் அதன் கதவுகள் உடைக்கப்பட்ட நிலையில் இருந்ததால் அங்கிருந்த பொருள்கள் காணாமற் பொய்விட்டன.

தற்சமயம் உணவுப்பொருள்கள் இன்றி களஞ்சியம் வெறுமையாகக் கிடப்பதாகவும், புதிதாக உணவுப் பொருள்கள் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-164-3)

# காயமுற்றோர் படகு மூலம் கொண்டுவரப்படுகின்றனர்

ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கையின் போது காயம் அடைந்த பொதுமக்கள் படகுகள் மூலம் யாழ்ப்பாணப் பகுதிகளுக்குக் கொண்டு வரப்படுகின்றனர்.

உறவினர்களே பெரும் கஷ்டங்களையும், ஆபத்துக்களையும் எதிர்நோக்கியவாறு காயமடைந்தவர்களை வள்ளங்களில் இக்கரைகொண்டுவந்து சேர்க்கின்றனர்.

காயமுற்றவர்களில் பலர் எவ்வித மருத்துவ வசதியும் இல்லாமல் உபாதையுற்றவர்கள் ஆவர். [இ]

# மூளாய் ஆஸ்பத்திரி இயங்குகிறது

சுழிபுரம், செப். 2

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி மீண்டும் இயங்கத் தொடங்கி உள்ளது.

பிரஸ்தாப ஆஸ்பத்திரிமீது கடந்த மாதம் 22 ஆம் திகதி குண்டு வீசப்பட்டு அதன் ஒருபகுதி முற்றாகச் சேதமடைந்திருந்தது. பல லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபசரணங்களும் நாசமடைந்தன.

நோயாளர்களின் நலன் கருதி ஆஸ்பத்திரியில் கடந்த திங்கட்கிழமை முதல் மீண்டும் சிகிச்சை அளித்தல் ஆரம்பமாகியுள்ளது. (அ)

# யாழ். அரசாங்க அதிபர் கொழும்பு செல்வார்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை நிலை குறித்து நேரடியாக விளக்கமளிக்க யாழ்- அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கொழும்பு செல்லவிருக்கிறார்.

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் கப்பலில் இருந்து உணவுப்பொருள்களை இறக்கும் வேலைகள் முடிவடைந்து அது கொழும்புக்கு திரும்பிச் செல்லும் போது அரச அதிபரும் அதில் செல்வார்.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்ரத்வத்தையைச் சந்தித்து இங்கு ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை, பணப் புழக்கப் பாதிப்பு, அகதிகள் நிலை, இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சேதங்கள் ஆகியவை குறித்து அவர் நேரடியாக விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

# மீண்டும் திரும்புகின்றனர்

நவாலி, செப். 2

காரைநகர்ப் பகுதி மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்புகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து அங்கிருந்து மக்கள் வெளியேறி இருந்தனர். (ஒ-100)

# 4 தமிழ் மாவட்டங்களில் காலவரையற்ற ஊரடங்கு

## நேற்று அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, செப். 2

கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா, மன்னார் ஆகிய நான்கு தமிழ் மாவட்டங்களில் நேற்று [சனிக்கிழமை] காலை ஆறு மணி முதல் ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக அரசாங்கம் வானொலி மூலம் அறிவித்தது.

மறு அறிவித்தல் வரை இந்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்றும்—

பொது மக்கள் வீடுகளில் தங்கியிருக்கவேண்டும் என்றும்—

இதை மீறுவோர் போராளிகள் எனக் கணிக்கப்பட்டு, அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

# குஜ்ரால் வருவது குறித்து அமைச்சர் ரஞ்சனின் நிலை

கொழும்பு, செப். 2

வடக்கு-கிழக்கு நிலைமையை நேரிற் கண்டறிய வரவுள்ள இந்திய நாடாளுமன்றத் தூதுக் குழுவிற்கு இலங்கை அரசு அனுமதியளிக்குமா?

இக்கேள்விக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பதிலளித்திருக்கிறார்

அமைச்சர் சொன்னதாவது;

இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர் குமார் குஜ்ராலோ அல்லது இந்திய நாடாளுமன்றக் குழுவோ இலங்கைக்கு விஜயம் செய்வதை நாம் ஆட்சேபிக்கவில்லை.

அவர்கள் ராஜதந்திர ரீதியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதியிடம் அனுமதி பெற்றால் நாம் அவர்களை வரவேற்போம்- என்றார். [ஒ-எ]

# மடு தேவாலயத்தில் மட்டும் ஐயாயிரம் தமிழ் அகதிகள்

வவுனியா, செப். 2

மன்னார் மாவட்டத்தில், மடு தேவாலயத்தில் உள்ள அகதி முகாமிலேயே அதிக எண்ணிகையானோர் தங்கியுள்ளனர்.

அங்கு ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் உள்ளனர்.

அவர்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் நித்தியானந்தம் தொண்டர்களின் உதவியுடன் செய்து வருகிறார். பங்குத்தந்தை அருட்திரு யேசுராசா அடிகளும் அகதிகளின் நலன்களைக் கவனித்து வருகிறார்.

பெரும் எண்ணிக்கையான அகதிகளுக்கு வேண்டிய உணவு மற்றும் மருந்துப் பொருள்களை குழந்தைகள் பாதுகாப்பு நிதியம். கிறிஸ்தவ சேவா சங்கம், வாழ்வோதயம், சர்வோதயம் என்பன இணைந்து வழங்கி வருகின்றன.

சமூக சேவைப் பகுதி சிறிதளவு உதவியையே வழங்கி உள்ளது. வாழ்வோதயம் அகதிமுகாமில் வைத்திய நிலையம் ஒன்றை நடத்தி வருகிறது.

இதேவேளை எருக்கலம்பிட்டி, பட்டித்தோட்டம், பேசாலை, விடத்தல்தீவு ஆகிய இடங்களிலும் சிறு சிறு அகதி முகாம்கள் இயங்குகின்றன.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் தமிழகம் சென்றுவிட்டார்கள். [அ-164]

# கட்டடங்கள் பலவற்றை உடைத்து செட்டிகுளம் முகாம் விஸ்தரிப்பு

வவுனியா, பறையனாளங்குளத்தில் இருந்த இராணுவ முகாம் மூடப்பட்டு விட்டது. அங்கிருந்தபடையினர் செட்டிகுளத்துக்குத் தருவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையில் —

செட்டிகுளம் பகுதியிலுள்ள அரச கட்டடங்கள் பலவும், வீடுகள், கடைகள் என்பனவும் இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப்பட்டு வருகின்றன.

இம்முகாமை விஸ்தரிக்கும் வகையிலேயே இராணுவத்தினர் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அறிய வந்தது.

ஏற்கனவே மன்னார் பியரில் இருந்த முகாம் வாபஸ் பெறப்பட்டு மன்னாருக்குள் கொண்டு செல்லப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை செட்டிகுளத்தில் இராணுவ அட்டகாசத்தால் மக்களுக்குப் பெரும் பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது.

வெங்கலச் செட்டிகுளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகம் சேதம் அடைந்துள்ளது. அங்கிருந்த 2000 கிலோ உழுந்து, தளபாடங்கள், முட்கம்பி, சிமெந்து என்பன எரித்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. ஏனைய பல பாவனைப் பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

அங்கு இருந்த 10 லட்சம் ரூபா பெறுமதியான ஜனசக்தி முத்திரைகள் கிழித்தெறிந்து நாசமாக்கப்பட்டுள்ளன. இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை

இதேவேளை செட்டிகுளம் உதவி அரச அதிபர் அலுவலகம், உதவி அரச அதிபர் விடுதி ஆகியனவும் தரைமட்டமாக்கப்பட்ட கட்டடங்களில் அடங்கும். (அ-164)

## சிப்பாய்கள் காயம்

கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் மட்டக்களப்பு பார் வீதியில் ரோந்துசென்ற படையினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு சிப்பாய்கள் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# திங்கள் தேர்

யாழ்ப்பாணம், செப். 2

பிரசித்தி பெற்ற மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா நாளை திங்கள் காலை 5 மணிக்கு நடைபெறும். [ஒ-6]

# ஹெலி சுட டிராக்டரிலிருந்து கீழே குதித்தவர் மரணம்

டிராக்டரை ஓட்டிச் சென்றவர் ஹெலி தாக்குதல் நடத்தவே டிராக்டரில் இருந்து வெளியே பாய்ந்தார். பாயும்போது அதே டிராக்டரின் பெட்டியில் மோதுண்டு மரணமானார்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு கண்டாவளையில் போக்கறுப்பு என்னும் இடத்தில் நடைபெற்றது.

இறந்தவர் போக்கறுப்பைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை சந்திரகுலசிங்கம் [வயது 23] என்று தெரிவிக்கப்படுகிறது.

காயம் அடைந்த நிலையில் மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இவர் மரணமானார்.

மூன்று டிராக்டர்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த போதே இத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. (இ-15)

# கிளிநொச்சி: மிதிவெடியில் சிக்கினார்

கூலிக்கு வளவு துப்புரவு செய்யச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி வலதுகாலை இழந்தார்.

கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை இச் சம்பவம் நடந்தது.

கிளிநொச்சி காந்திநகரைச் சேர்ந்த காளிமுத்து கறுப்பையா [வயது 19 ]என்பவரே காலை இழந்தவர் ஆவார். (இ-15)

# விடுதலைப் புலிகள் குறித்து அரசின் அணுகுமுறை

## டாக்காவில் ரணில் விளக்கம்

டாக்கா, செப். 2

விடுதலைப்புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தவும் அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா டாக்காவில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதன் மூலம் ஏற்கனவே முறிவடைந்த பேச்சுவார்த்தைகளை நாம் மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றும் அமைச்சர் சொன்னார்.

ஆயுதங்களை வைத்து இருக்கும் போது பேச்சுக்களை நடத்த முடியாது என்றும்— நாட்டின் மூன்றில் ஒரு பங்கில் தனிநாடு அமைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அமைச்சர் சொன்னார். [ஒ-எ]

# ஹெலிகளின் அட்டகாசம்

யாழ்ப்பாணம், செப். 2

பலாலியில் இருந்து மண்டைதீவுக்குச் செல்லும் ஹெலிகள் தினசரி ''அட்டகாசம்'' புரிகின்றன.

மானிப்பாய், ஆனைக் கோட்டைப் பகுதியில் அவை [illegible] ளைத் தீர்த்து விட்டுச் செல்கின்றன. (ஒ-5)

# முதியவரைப் படையினர் கிணற்றில்தூக்கிப்போட்டனர்

அராலி, செப். 2

முன்னாள் குடிசன மதிப்பீட்டு உத்தியோகத்தர் ஒருவரை படையினர் கட்டிப் போட்டு கிணற்றினுள் தூக்கிப் போட்டனர்.

இவரைக் காணாது தேடிய உறவினர்கள் கிணற்றில் இருந்து மீட்டனர். அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு அவரது உயிர் காப்பாற்றப்பட்டது.

காரைநகர் பாலாவோடையில் இச்சம்பவம் நடந்தது. தம்பையா பொன்னம்பலம் [64 வயது] என்பவரே கிணற்றிலிருந்து மீட்கப்பட்டவர் ஆவார்.

கடந்த 22ஆம் திகதி புதன் கிழமை பாலாவோடை நோக்கி முன்னேறிய படையினரிடமே இவர் சிக்கினார்.

படையினரின் சித்திரவதையைத் தாங்க முடியாத நிலையில் தம்மைச்சுடுமாறு இவர் சிங்களத்தில் கேட்டுக்கொண்டார் என்றும் அதன் பின்பே படையினர் இவரை அடித்து கட்டிக் கிணற்றில் போட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் பட்டினிச் சாவு அபாயம்;
# உணவு அனுப்புவதில் கஷ்ட நிலை

யாழ்ப்பாணம், செப். 2

நெடுந்தீவைச் சேர்ந்த 1 500 குடும்பங்கள் கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக உணவுப் பொருள் வசதி எதுவும் இல்லாமல் அவதிப்படுகிறார்கள், என அறியப்படுகிறது.

யுத்த நிலைமை தொடங்கிய பின்னர் கடந்த இரண்டரை மாத காலமாக நெடுந்தீவுக்கான படகுச் சேவை ஒழுங்காக நடப்பதில்லை. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வள்ளச் சேவையும் வெகுவாகக் குறைந்துவிட்டது.

இதனால் நெடுந்தீவுக்குத் தேவையான உணவுப்பொருள்களை அங்கு எடுத்துச் செல்வதில் கஷ்டங்கள் நிலவியது. குடாநாட்டில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடு நெடுந்தீவை மேலதிகமாகப்பெரிதும்பாதித்தது.

நெடுந்தீவின் உணவுப் பற்றாக்குறையை நீக்கி மக்களுக்கு உதவும் பொருட்டு அப்பகுதி பங்குத்தந்தை யாழ்ப்பாணம் வந்து மனித முன்னேற்ற நடுநிலையத்தில் இருந்து உணவுப்பொருள்களைப் பெற்றுள்ளார்.

ஆனால் ஊர்காவற்றுறைப் பகுதியில் தொடங்கிய இராணுவ நடவடிக்கை காரணமாக அதனை எடுத்துச்செல்ல முடியாது கடந்த பத்து நாட்களுக்கு மேல் கஷ்டப்படுகிறார்.

உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் உதவியை நாடியபோதிலும் சாதகமான பதில் எதுவும் நேற்றுவரை கிடைக்கவில்லை என்றும் —

உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல மேலும்தாமதம் ஏற்பட்டால் நெடுந்தீவில் நூற்றுக்கணக்கான மக்கள் பட்டினியால் மரணமடையலாம் என்றும் —

பங்குத்தந்தை வண பிதா. எம்.எம்.வி. அமிர்தகுமார் அச்சம் தெரிவித்தார் [அ]

## இன்று தேர்

யாழ்ப்பாணம், செப். 2

பிரசித்தி பெற்ற தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 9-00 மணியளவில் நடைபெற உள்ளது. (ஒ-6)

## பஸ் சேவை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 2

கொழும்பு மற்றும் வவுனியா போன்ற தூரஇடங்களுக்கான பஸ்சேவை சம்பந்தமானகலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற இருக்கிறது.

மினிபஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. [ஒ-3]

## யாழ். மாவட்ட ஆசிரியருக்கு கஷ்ட நிவாரண அலவன்ஸ்

யாழ் - மாவட்ட ஆசிரியர்களுக்கு கஷ்ட நிவாரண அலவன்ஸாக இம்மாதம் அரை மாதச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அலவன்ஸை வழங்க மாகாணசபை கல்வி அமைச்சு அனுமதிவழங்கியுள்ளதாகவும் கட்டுநிதியும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்த மாதச் சம்பளத்துடன் அலவன்ஸ் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## இராணுவ நடவடிக்கைக்கே ஊரடங்குச் சட்டமாம்

கொழும்பு, செப். 2

தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்காகவே கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

கொழும்பில் இராணுவஅதிகாரிகள் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்கள்.

''வடபகுதியில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த முடியாத நிலையில் படையினர் இருக்கின்றனர். இந்த நிலையில் அரசு வடக்கில் எல்லா மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி உள்ளது. இதன் நோக்கம் என்ன என்பது புரியவில்லை'' — என்று கொழும்பிலுள்ள பி பி சி. செய்தியாளர் தெரிவித்தார்.

ஊரடங்கை அமுல்படுத்தி எவ்வகையான இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்பது குறித்து இராணுவ அதிகாரிகள் தகவல் வெளியிடவில்லை என இந்திய வானொலி தெரிவித்தது. (ஒ-எ)

## மானிப்பாய் ஆஸ்பத்திரியில் 10 வீத ஊழியர்களே கடமை

### கலந்துரையாடலில் கவலை

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் இப்போது 10 வீத மானவர்களே கடமைக்குச் சமுகமளிக்கிறார்கள்.

நோயாளர் வருகை அதிகரித்துள்ள இந்த நேரத்தில், ஊழியர்கள் வருகை குறைவாக இருப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்று வைத்தியசாலையில் நடைபெற்றது. அப்போது மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டது.

பணிப்பாளர் செல்வி சண்முகம் தலைமையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரியும் கலந்துகொண்டார்.

ஊழியர்கள் அனைவரினதும் பாதுகாப்புக்குத் தமது அமைப்பு உத்தரவாதம் தருவதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி உறுதி அளித்தார்.

வைத்தியர்கள் வருகை திருப்தியாக இருப்பதாகவும், தாதிகள், சிற்றூழியர்கள் வருகையே குறைந்துள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-3-15)

## மிதிவெடியில் இளம்பெண் காலை இழந்தார்

யாழ்ப்பாணம், செப். 2

அல்லைப்பிட்டியில் நேற்று முன்தினம்(வெள்ளி)மிதிவெடியில் சிக்கி இளம் பெண் ஒருவர் காலை இழந்தார்.

படையினரால் வைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இந்த மிதிவெடியில் சிக்கி காலை இழந்தவர் மண்டைதீவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ரேவதி (வயது 30) எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6-5)

## சூட்டினால் கால் இழப்பு

யாழ்ப்பாணம், செப். 2

வவுனியா கல்லாண்டகுளம் பகுதியிலுள்ள இராணுவத்தின் துப்பாக்கிசுடும் பயிற்சி நிலையத்தில் இருந்து சுட்டதில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த புதன்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் வேப்பங்குளத்தைச் சேர்ந்த கந்தையா தர்மராசா [வயது40] என்பவரே படுகாயமுற்றவராவார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவரது கால் ஒன்று அங்கு அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ]

## இராணுவ நடவடிக்கையினால்
## ஊர்காவற்றுறை ப.நோ.கூ சங்கத்துக்கு ரூ.30 லட்சம் நஷ்டம்

யாழ்ப்பாணம், ஆக. 2

இராணுவ நடவடிக்கையினால் ஊர்காவற்றுறை ப நோ. கூ. சங்கத்திற்கு சுமார் 30 லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டடங்கள், உணவுப் பொருள்கள், மற்றும் சங்கத்திற்குச் சொந்தமான வாகனம் என்பனவற்றுக்கு ஏற்பட்ட சேதங்களைக் கொண்டே பெறுமதி கணக்கிடப்பட்டதாக கூட்டுறவுத் துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-5-3)

## ஹெலி சூடு! பக்தர்கள் காயம்

பண்டத்தரிப்பு, செப். 2

பண்டத்தரிப்பு, பிராம்பற்று முருகமூர்த்தி ஆலயச் சுற்றாடலில் நின்ற பக்தர்கள் மீது நேற்று முன்தினம் [வெள்ளி] ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது.

இச் சம்பவத்தில் பக்தர்கள் சிலர் காயமடைந்தனர்.

வருடாந்த உற்சவம் நடைபெற்று வரும் இந்த ஆலயத் [illegible] ஹெலி தாக்குதலை நடத்தியது. (ஒ-120)

## 'அவ்ரோ' குண்டினால் அச்சுவேலி அதிர்ந்தது!

நேற்றுமுன் தினம் (வெள்ளி) மாலை 5 மணியளவில் அச்சுவேலிப் பகுதிக்கு மேலாக வந்த 'அவ்ரோ' விமானம் திடீரென குண்டு ஒன்றை தள்ளியது.

இந்தக் குண்டு விளங்கிய வத்தையில் விழுந்து வெடித்தது. இதனால் அச்சுவேலிப் பகுதியே அதிர்ந்து குலுங்கியது,

புதிதாகக் கட்டப்பட்ட இரண்டு மாடி வீடு ஒன்று தகர்ந்து தரைமட்டமாகியது இன்னும் சில வீடுகளும் சேதமுற்றன. (ஒ-11)

## காயமுற்றோர் ஆஸ்பத்திரியில்

ஆகஸ்ட் நான்காம் வாரத்தில் ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிகளில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது காயமடைந்த நால்வர் நேற்று மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் அகஸ்டீன் (வயது 31), மரியாம்பிள்ளை இம்மானுவேல் [வயது 58], மண்குளியைச் சேர்ந்த பி தியாகினி [வயது 23], வேலணையைச் சேர்ந்த செல்லம் கார்த்திகேசு [வயது 61] ஆகியோரே அந்த நால்வரும் ஆவர். [ஒ-15]

## விமான கட்டணம் உயர்வு

லண்டன், செப். 2

எரிபொருள் விலை உயர்வை அடுத்து, உலகில் உள்ள முன்னணி விமான சேவை நிறுவனங்கள், விமானக் கட்டணங்களை அதிகரித்துள்ளன. (ஒ-எ)

## ஊர்காவற்றுறை. . .

[1ஆம் பக்கத்தொடர்ச்சி]

குக் கொண்டு வருகிறோம் என்று அந்தக் கடிதம் தொடங்குகிறது.

மனிதர்கள், தேசங்கள், நடத்தைகள் என்பவற்றின் தலைவிதியை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சக்தி பார்த்துக்கொண்டு நிர்ணயிக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறோம் என்று அந்தக் கடிதம் முடிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ ''ஒப்பரேஷன் யாழ். கோட்டையை'' இராணுவ நடவடிக்கைக்காக ஆகஸ்ட் 22 ஆம் திகதி தொடக்கம் விமானத் தாக்குதல்கள், நீண்ட தூர ஆட்டிலறி ஷெல் வீச்சுகள், பீரங்கிப் படகுகளின் குண்டுத் தாக்குதல்கள், ஹெலிகளின் றொக்கட் தாக்குதல்கள் என்பன முழுப் பலத்துடனும், மூர்க்கத்தனமாகவும் யாழ். குடாநாடு முழுவதிலும் குறிப்பாக காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டன.

★ இருதய நோயாளிகள் இறந்து வரும் அளவுக்கும், நூற்றுக்கணக்கான பெண்களும், குழந்தைகளும் மயங்கி விழும் அளவுக்கு பூமி குலுங்கி, நடுங்கி அதிருமளவுக்கு தாக்குதல்கள் கர்ண கொடூரமாக இருந்தன.

★ இராணுவப் படைகள் காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் தரை இறங்கி நாரந்தனை, வேலணை மண்டைதீவு ஆகிய இடங்களுக்கு முன்னேறிச் செல்கையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் சுடப்பட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர்.

★ பல கிராமங்கள் உருவம் மாறும் அளவுக்குப் பிளவுபடுத்தப்பட்டு அழிக்கப்பட்டன.

★ இராணுவ நடவடிக்கையால் காயமுற்று வீதிகளிலும் வீடுகளிலும் அல்லற்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்க எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை.

★ சுகாதாரப்பகுதி, யாழ். செஞ்சிலுவைச்சங்கம், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு இவற்றில் எதனிடமும் அம்புலன்ஸ் படகு ஒன்று தானும் இல்லை. இதனால் தீவுப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை இன்றி அநியாயமாகச் சாக நேர்ந்தது.

★ ஊரடங்கு அமுலில் உள்ளதால், ஏற்கனவே சீர்குலைந்திருந்த சிவில் வாழ்வு மேலும் பாதிப்படைந்து விட்டது. உணவு, வைத்தியவசதி, எரிபொருள், மின்சாரம், பணப்புழக்கம் என்பன இல்லாமையால் மக்கள் பாதாளத்திற்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். (அ)

## முல்லை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளைத்ததாகவும்-

அதனை அடுத்து அந்தப் பகுதிகளிலும் முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளிலும் கடும் சண்டை வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்துபெரும் மோதல் இடம் பெற்று வருகிறது.

கடலில் இருந்து தரைப் பகுதிகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும்-

அவ்ரோ மற்றும பொம்மர்களில் இருந்து இடைவிடாது குண்டுகள் வீசப்பட்டு வருவதாகவும் தெரியவந்தது. (உ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி.சபாரத்தினம் செல்லம்மா

திருமதி. சபாரத்தினம் செல்லம்மா காலமாகிவிட்டார். இவர் நயினாதீவு காலஞ் சென்ற முருகேசு சபாரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கனகநாயகம் (பிரான்ஸ்), இராசேந்திரம் (வருமானவரித் திணைக்களம், கொழும்பு), அமிர்தகௌரி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பிறவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு 2 - 09 - 90 ஞாயிற்றுக்கிழமை இன்றுகாலை 9.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

15, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
கௌரி.[மகள்]
(13934)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org